(3). File

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6:00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 17 வியாழக்கிழமை (29-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 95

# சிங்களவர் வீடுகளில் குடியிருக்கும் தமிழர் வெளியேற்றப்படுகின்றனர்!

## கொழும்பில் நிர்ப்பந்தம்

கொழும்பு, பெப்ரவரி 29

**கொழும்பில் சிங்களவர்களுக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருக்கும் தமிழர்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.**

தமிழர்களுக்கு வீடுகளை வழங்கியுள்ள சிங்களவர்களுக்கு மிரட்டல் கடிதங்கள் வந்துள்ளதாகவும் —

இதனால் தங்களது வீடுகளை விட்டு வெளியேறுமாறு வீட்டு உரிமையாளர்கள் தமிழ்க் குடியிருப்பாளர்களை நிர்ப்பந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழர்கள் கொழும்பில் தங்கும் சுமார் ஐநூறு லொட்ஜுகள் அடுத்த வார

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 5ஆம் திகதி உயர்வகுப்புகள் ஆரம்பம்

கொழும்பு பாடசாலைகளில் 11ஆம், 12ஆம், 13ஆம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகளை அடுத்த மாதம் 5ஆம் திகதி மீண்டும் ஆரம்பிப்பது என்று கல்வி, உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சு அதிகாரிகள், மாகாண கல்வியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், மாவட்ட பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் கடந்த 15 ஆம் திகதி முதல் மூடப்பட்டதும்—

கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டப் பாடசாலைகள் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியதும் தெரிந்தவையே. (உ-3)

## ஆசிரியர்களின் சம்பளமே இனி அதிபர்களுக்கும்!

கொழும்பு, பெப். 29

அரச பாடசாலை அதிபர்கள் அனைவருக்கும் அரச பாடசாலை ஆசிரியர்களின் புதிய சம்பளத்துக்குச் சமதையான சம்பளத்தையே வழங்குவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

சம்பள மாற்றம் தொடர்பான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்களுக்கு என ஆசிரிய சேவை ஒன்று கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதும் —

அதனடிப்படையில் ஆசிரியர்களுக்கு பெரும் சம்பள அதிகரிப்பு ஒன்று வழங்கப்பட்டதும் தெரிந்தவையே.

இச்சம்பள அதிகரிப்பு அதிபர் சேவைக்கு வழங்கப்படவில்லை.

எனினும் —

அதிபர் சேவையுடன் ஒப்பிடும் போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரிய சேவையில் உள்ளோருக்கு அதிகளவு சம்பளம் வழங்கப்படுவதாகவும் —

எனவே அதிபர்களின் சம்பளமும் — ஆசிரிய சேவைக்கு வழங்கப்பட்டது போன்று —

(4ஆம் பக்கம் பார்க்க)

### வலிகாமத்தில் தங்கியுள்ள

## 56 அதிபர், ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம்

வலிகாமத்தில் தங்கியுள்ள 56 அதிபர், ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் ஒன்றை வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இம்மாதம் முதல் வழங்கியுள்ளார்.

வலிகாமத்தில் பல பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றிவந்த 56 ஆதிபர், ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களுக்கே அங்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள 5 பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயத்துக்கு திருமதி கோ. அம்பலவாணரும், சென். சாள்ஸ் ம. வி.க்கு திருமதி எம். ஆர். எஸ். கொன்ஸ்ரன்ரைனும், இணுவில் இந்துக் கல்லூரிக்கு ஆ. கமலநாதனும், விக்ரோறியாக் கல்லூரிக்கு என். சண்முகசுந்தரமும், மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு திருமதி வ. பசுபதிப்பிள்ளையும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாக பிரதி அதிபர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய ஆசிரியர்களும் இந்த ஐந்து பாடசாலைகளுக்கே இணைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## வலிகாமத்தில் குண்டுச் சத்தம்

வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலையில் பெரும் வெடிச் சத்தங்கள் கேட்டன.

அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்குள்ள வீடுகளையும், சுட்டடங்களையும் தகர்த்ததால் எழுந்த சத்தங்களாக இவை இருக்கலாம் எனக் கருதப்பட்டது.

வலி. கிழக்கில் அடிக்கடி இத்தகைய குண்டுச் சத்தங்கள் கேட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-15-80-173)

## செங்கலடியில் மோதல்

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிக்கு 3கிலோ மீற்றர் மேற்கே உள்ள கல்முனை வெளி என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை 8 00 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (உ-3-7)

## கொழும்பில் மோப்ப நாய்கள்

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் மற்றும் நகருக்குள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களில் வெடிகுண்டுகள், வெடிமருந்துக்கள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு விசேட பயிற்சியளிக்கப்பட்ட மோப்ப நாய்களை நேற்று முதல்கொழும்புப் பொலீஸார் பயன்படுத்தி வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-3-6)

## அடுத்த வாரம் நிவாரண முத்திரை

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களில் ''இ'' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு கிராம சேவையாயர் ஊடாக உலர் உணவு நிவாரண முத்திரைகள் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவிருக்கின்றன.

புதிய முத்திரைகளுக்கே 6ஆம் கட்ட நிவாரணம் வழங்கப்படும் என்று யாழ் செயலக புனர்வாழ்வு பிரிவினர் தெரிவித்தனர். (உ-ரி-3)

## ஆங்கில ஆசிரியர் நியமனம்

அடுத்த மாதம் முதல் வாரத்தில் 473 ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவுள்ளதாக கல்விச் சேவைக் குழு அறிவித்துள்ளது.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களுக்கே [illegible] நியமனம் வழங்கப்படவுள்ளது. (உ-3)

## அதிகாலையில் பதற்றத்தை ஏற்படுத்திய ஷெல்கள்!

சாவகச்சேரி, பெப். 29

பலாலி முகாமிலிருந்தும், ஆனையிறவு முகாமிலிருந்தும் நேற்றுக் காலை 5 மணிக்கு படையினர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வானத்தில் ஒரு தடவை வெடித்து, பின்னர் தென்மராட்சி எல்லைகளில் வீழ்ந்து வெடித்தன.

எழுதுமட்டுவாள், கெற்பலி, பண்டிதர் குடியிருப்பு, புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி மற்றும் கட்டைக்காடு, நாகர்கோயில், தொண்டமானாறுப் பகுதிகளில் இந்த ஷெல்கள் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் ஷெல்கள் வெளிகளில் வீழ்ந்து வெடித்ததால் உயிர், உடைமைச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும்—

வானத்தில் வெடித்து பெரும் அதிர்வை ஏற்படுத்தியவாறு கூவிக் கொண்டு சென்ற இந்த ஷெல்களினால் நித்திரைப் பாயில் இருந்த மக்கள் பெரும் பதற்றமடைந்தனர். (உ-13-15-36-80-111-117-273)

## 'லங்கா கல்யாணி'யில் வந்த பொருள்கள் காங்கேசனில்!

பருத்தித்துறைக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரும் பணியில் ஈடுபடும் ''லங்கா கல்யாணி''யில் இம்முறை காங்கேசன்துறைக்கு பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் தற்போது அங்கு இறக்கப்பட்டு வருவதாகவும் தெரியவந்தது.

வலிகாமத்தில் உள்ள மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்க தேவையான பொருள்களே இதில் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் என்ன பொருள்கள் இக்கப்பலில் வந்தன என்ற விவரம் தெரியவரவில்லை. (உ-3)

## இணைப்புக்கு ஆதரவு தர ஐ.தே.கவிடம் கோரிக்கை

### கூட்டணி சந்திப்பின் போது

கொழும்பு, பெப். 29

வடக்கு – கிழக்கு இணைப்புக்கு ஐ. தே. க. ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

கூட்டணியின் உயர் மட்டத் தூதுக்குழு ஒன்று நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்தது.

அப்போதே மேற்கண்ட விடயத்தை கூட்டணியினர் ரணிலிடம் வலியுறுத்தி உள்ளனர்.

அரசின் தீர்வுத் திட்டத்துக்கு ஐ. தே. க. சில திருத்தங்களை கொண்டு வரவுள்ளதாகவும், அத்திருத்தங்கள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் ரணில் தெரியப்படுத்தி உள்ளார்.

கூட்டணியினரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஐ. தே. கட்சியின் திருத்த யோசனைகளில் உள்ளடக்குவது குறித்து ஆராயப்படும் என்றும் ரணில் தெரிவித்தாராம். (அ-3)

## ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு ஒன்றைகாணமுடியாது

### 5 தமிழ் கட்சிகள் கருத்து

கொழும்பு, பெப். 29

★ ஒற்றையாட்சி என்ற கட்டுக்கோப்பில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியாது.

★ அரசியல் தீர்வு பேச்சு வார்த்தையில் இருந்து எதிர்க்கட்சியான ஐ. தே. க. விலகிச் செல்லக் கூடாது.

— இவ்வாறு ஐந்து தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கவிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை கூடிய ஐ.தே.கவின் செயற்குழு, அரசாங்கத்தின் யோசனையை நிராகரிக்க வேண்டும் என கொள்கை அளவில் இணக்கம் கண்டதையடுத்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச முடிவு செய்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு கை பாவனையிலுள்ள இத்தாலி ரக லாம்பிறட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு சந்திக்கும் நேரம்: மாலை 5 மணிக்கு மேல். கு. நித்தியானந்தன், மே/பா தாபு மயில்வாகனம், மதுவன் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. (40846)

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், விவா, (பிளாஸ்ரிக் மூடியுடன் 400 gm) பியர் / நெல்லிக் கிறஷ், ஜாம், கோடியல் போத்தல்கள் உள்ளவர்கள் வல்வெட்டித்துறையில் உள்ள மாருதி ஸ்ரோர்ஸ், செல்வச் சன்னிதி ஸ்ரோர்ஸ் ஆகியவற்றில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட். (சி/4003)

### சோதிடம்

வெளிநாடு ஜெனன ஜாதகக்குறிப்பு எழுத பலன் பார்க்க சோதிடர் சிவா, நல்லூர். தொடர்பு: சிவகந்தசாமி ஆச்சாரி, மீனாட்சி அம்பாள் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (40847)

### SPECIAL ENGLISH

பட்டப்படிப்புவரை English போதிக்கப்படும். சகல Universityகளில் உள்ளவர்களுக்கும் ESL போதிக்கப்படும். V. N. Kandasamy A. I. B. Part I (London), Inter (London) Dip-in-English. கைதடிச் சந்திக்கு அண்மையில் உள்ள ஒழுங்கையில் Dr. சபாநாதன் வீட்டிற்குச் சமீபத்தில், கைதடி. (40874)

### தவறிவிட்டது

புங்குடுதீவு முதலாம் வட்டாரம், திருச்செல்வம் கேதாரகௌரி என்பவரது 575173284V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் சாவகச்சேரி கண்டி வீதி, ஆரிய பவானில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (40875)

## செயற்கை உறுப்பு நிறுவனம்

கிளிநொச்சி, பெப். 29

செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் ஒன்று அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்நிறுவனத்துக்கு வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் எனப்பெயர் இடப்பட்டுள்ளது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் இத்திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

விபத்துக்களில் அங்கங்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புக்கள் பொருத்துவதற்கு இந்நிறுவனம் உதவும். (இ-ரி)

## வவுனியா ஆஸ்பத்திரிக்கு கனேடிய உதவி

கொழும்பு, பெப். 29

வவுனியா ஆதாரவைத்திய சாலையை நவீன வசதிகளுடன் புதுப்பிப்பதற்குகனேடிய அரசாங்கம் 17லட்சம்ரூபாவை வழங்குவதாக வவுனியா அரச அதிபர் திரு. கணேஷ் தெரிவித்தார். (இ-7)

### வடபகுதிக்கு வரும் பயணிகளை

# 2 நாள்கள் தடுத்துவைக்கும் முறை விரைவில் நீக்கம்?

கொழும்பு. பெப். 29

கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வடபகுதி செல்லும் பயணிகளை வேப்பங்குளத்தில் 48 மணிநேரம் தங்க வைத்து சோதனை செய்யும் பாதுகாப்பு நடைமுறை விரைவில் நீக்கப்படும்.

வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் இந்த விடயம் தொடர்பாக, பொலீஸ் அத்தியட்சகர் நிமால் நீல்கேயுடன் தொடர்பு கொண்டு எடுத்துச் கூறியதையடுத்து 48 மணிநேர கட்டாய சோதனையை நிறுத்துவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ-3)

## தவறிவிட்டது

28-02-96 அன்று வரணிக்கும், கொடிகாமம், சாவகச்சேரிக்கும் இடையில் ஆ. ரோகினி என்பவருடைய ரூபா 2921/10 பெறுமதியுடைய — நீர்ப்பாசன திணைக்களத்தின் — இலங்கைவங்கி காசோலை தவறிவிட்டது. எடுத்தவர்கள் ராயூ அழகுசாதன மாளிகை, கச்சாய் வீதி, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும். (40883)

## கடன் மீளப்பெறுதல்

''அன்சுகா'' எரிபொருள் வாணிபத்தில் கடனாகப் பெற்றுக் கொண்டவர்கள் அதற்குரிய பணத்தை கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும்.

உரிமையாளர்
(மணி)

வெற்றி சைக்கிள் வேக்ஸ்,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(40317)

## கருத்தரங்கு

பகவான்

**ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் தத்துவங்கள்**

இடம்: வடஇந்து மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்: **02 - 03 - 1996** சனிக்கிழமை
நேரம்; மாலை 4-00 — 5-30 மணி வரை

தலைவர்: **திரு. செ. ஸ்ரீநிவாஸன்**
(உதவி அரசாங்க அதிபர், கரவெட்டி)

**கருத்துரைகள்**

அவதார நோக்கம்: பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
கல்வித் தத்துவம்: திரு. நா. கந்தசாமி
சேவைத் தத்துவம்: திரு. வே. சேனாதிராசா

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ★

ஸ்ரீ சத்தியசாயி நிலையங்கள்
மந்திகை, வியாபாரிமூலை.

(40315)

## இடமாற்றம்

**வி. எஸ். பி. குறூப்**

**V. S. B. GROUP**

275, 277, அர்ச்சுனா சாலையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது 176, கண்டி வீதி (R.P.N. மில் உட்புறம்) சாவகச்சேரியிலும், கிளை பிரதான வீதி, நெல்லியடியிலும் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

பங்காளர்கள்
வி. எஸ், பி. குறூப்

(40871)

## வன்னி பெருநிலப்பரப்பில்

யாழ். முன்னணி ஆசிரியர்களின்
ஒருங்கிணைந்த சேவை

**A/L**

**96 கலை, வர்த்தகம் 97**

| | | |
|---|---|---|
| பொருளியல் | திரு. | வரதராஜன் |
| கணக்கியல் | திரு. | ஸ்ரீ |
| வர்த்தகம் | திரு. | வரதன் |
| வணிகப் புள்ளி விவரவியல் | திரு. | தவசேகர் |
| அளவையியல் | திரு. | சர்மா |
| தமிழ் | | பிரபல ஆசிரியர் |
| இ. நாகரீகம் | திரு. | சோதி |

ஆரம்பம் 02 03 96

(40467)

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கேட்டுள்ளது.

★ அருளம்மா தம்பித்துரை — மே/பா கணபதிப்பிள்ளை (மாஸ்ரர்), அன்னை இல்லம், கச்சாய் வடக்கு.
★ விமலராணி ரஞ்சன் — கைதடி கிழக்கு.
★ கதிர்காமு ராமலிங்கம் — மே/பா செல்லத்துரை, கைதடி கிழக்கு.
★ பூமணி கணபதிப்பிள்ளை — முருகன் வீதி, மறவன்புலம்.
★ பசுபதி யோகநாதன்—மே/பா S. சத்தியமூர்த்தி கைதடி வடக்கு.
★ நாகலக்சுமி அப்புத்துரை — மே/பா பொன்னம்பலம் ரதி, கரையர் கோவிலடி, சங்கத்தானை.
★ இந்திரா சிவகுருநாதன் — தாமோதரம் வீதி. சங்கத்தானை.
★ திலகமணி ரஞ்சிதநாதன்—இல 13, 2ஆம் குறுக்கு தெரு, கொழும்புத்துறை கிழக்கு.
★ கதிர்காமர் சிவசம்பு — 4 ஆம் வட்டாரம், நிற்சாமம், சங்கானை.
★ கந்தசாமி நடராசா — காட்டுமேடு, நீர்வேலி வடக்கு.
★ வசந்தா சண்முகம்—மே/பா வே. பரமகுரு, எம். எஸ். ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு.
★ ஆறுமுகம் சின்னத்துரை — ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
★ சந்திராதேவி சின்னையா — சூரிய உதயா, சுதுமலை தெற்கு.
★ சின்னையா சண்முகலிங்கம் — ஞான வைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு.
★ பாலேஸ்வரி தர்மராசா — நவக்கிரி, புத்தூர்.
★ தயாபரி லோகநாதன் — காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
★ றஞ்சினிதேவி யோகநாதன் — கட்டைப்பிராய், வட்டக்குளம்.
★ இராசமலர் பாலசுந்தரம் — கட்டப்பிராய், வட்டக்குளம்.
★ ஜெயசந்திரிகா செல்வநாதன் —காளிபுரம், டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.
★ சி. இராசநாயகம் — மே/பா புதுவை இரத்தினதுரை, தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி.
★ கந்தையா பாலசுப்பிரமணியம் — ''சுந்தர வாசா'', மல்லாகம்.
★ புவனேஸ்வரி தம்பையா — இணுவில் தெற்கு.
★ தம்பையா சண்முகநாதன் மே/பா துரைசிங்கம் (கணக்காளர்), கல்வித் திணைக்களம், கிளிநொச்சி.
★ மு. லட்சுமி — மே/பா என். கனகசபை, எஸ். எஸ். ஆர். கடை, 13 ஆம் மைல் கட்டை, விசுவமடு.
★ பூரணம் — மே/பா கனகசபை, எஸ். எஸ். ஆர். கடை, 13 ஆம் மைல் கட்டை, விசுவமடு.
★ சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை — மே/பா சங்கரலிங்கம் சரஸ்வதி, 247, 3 ஆம் யூனிட், பாரதிநகர், யோகபுரம், மல்லாவி.
★ பூமணி வேலுப்பிள்ளை அல்லது வரதலட்சுமி யோகரட்ணம் — 210, சர்வோதய வீதி, ஜெயபுரம் தெற்கு, பல்லவராயன்கட்டு, பூநகரி.
★ தம்பிராசா திருநாவுக்கரசு — 33, 2 ஆம் யூனிற், வவுனிக்குளம்.
★ ஜெனித்தா யோகராஜ் — பிரதான வீதி, சுழிபுரம்.
★ கிருஷ்ணசாமி சிவயோகன்—சந்தியக்காடு சந்தை, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.
★ தம்பையா சிவசுப்பிரமணியம் — ''சிவஸ்தான்'', சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு.
★ அழகம்மா அண்ணாமலை — இணுவில் மேற்கு.
★ ஏ. யேசுதாசன் — 23, புதுமைமாதா கோவில், குருநகர்.
★ பெரியதம்பி செல்லத்துரை—பத்தமேனி, வைரவ கோவிலடி, அச்சுவேலி.
★ தசியஸ் தேவராசா தேவசகாயம்பிள்ளை — மே/பா தேவசகாயம்பிள்ளை, மடத்து ஒழுங்கை, பண்டத்தரிப்பு.
★ செல்வரத்தினம் சோதிப்பிள்ளை — சிறுப்பிட்டி வடக்கு.
★ விமலாதேவி மாணிக்கராசா — சிறுப்பிட்டி வடக்கு.
★ இராசையா நகுலேஸ்வரன் — ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ பரமேஸ்வரி பாலசிங்கம்—இல 5/12, ராசாவின் தோட்டம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
★ நளாயினி கந்தையா — உரும்பிராய் வடக்கு.
★ ஜெயராணி ஜெவிலம் — உரும்பிராய் கிழக்கு.
★ மஞ்சுளா தேவராஜா—இல 18, கதிரவேலு வீதி.
★ நாகமுத்து சீவரெத்தினம் — அரசடி வீதி, இருபாலை.
★ கதிரசு தங்கவேலு—மே/பா எஸ். திருச்செல்வம், கந்ததோட்டம், சித்தங்கேணி.
★ இராஜமணி பொன்னுத்துரை அல்லது லலிதாதேவி சந்திரமோகன் — இக்கிரானை, கந்தரோடை.
★ சசிகலா கந்தசாமி — கேணியடி, கொக்குவில் மேற்கு.
★ நல்லையா இராசநாயகம்—புன்னாலைக்கட்டுவன் வடக்கு.
★ கந்தையா சண்முகநாதன் — நவாலி வடக்கு.
★ சிந்தாமணி சின்னத்தம்பி — கந்தரோடை வீதி, மாசியப்பிட்டி.
★ ஜோசப் கிறேசியன் — இல 40, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
★ அ. ஜெ. பி. சேவியர் — இல. 32/28, அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தண்டனை என்ன?

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேசத்தில், கிளிவெட்டிப் பகுதியில் உள்ள தமிழ்க் கிராமம் குமரபுரத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் 24 பேர் படுகொலை செய்யப்பட்டதற்கு —

இராணுவத்தினரே முழுப் பொறுப்பு என்று அச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய இராணுவ விசாரணை மன்றம் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது.

கிழக்கில் படையினர் நடத்திய நூற்றுக்கணக்கணக்கான தமிழர் பெருவாரிப் படுகொலைச் சம்பவங்கள் மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வந்தன.

அத்தகைய முந்திய நிலையுடன் ஒப்பிடும்போது, குமரபுரம் படுகொலைகள் இடம்பெற்ற சில நாள்களிலேயே குற்றத்தை இராணுவம் ஒப்புக்கொண்டமை சற்று முன்னேற்றகரமானது எனலாம்.

கைப்புண்ணைப் பார்ப்பதற்குக் கண்ணாடி தேவையில்லை. எனினும் இராணுவத்தினரே கொலைகாரர்கள் என்று இப்போது உத்தியோக பூர்வமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினர் புரிந்த கொலைக் குற்றத்துக்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்களா, எத்தகைய தண்டனை வழங்கப்படும் என்பதில் தான் இனிமேல் இத்தகைய காட்டுமிராண்டித் தனங்களைத் தடுப்பது பொறுத்திருக்கிறது.

இராணுவ விசாரணை மன்றத்தின் அறிக்கையைத் தொடர்ந்து ஆகக்கூடியது சம்பந்தப்பட்ட சிப்பாய்களையும், அதிகாரிகளையும் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு மட்டுமே முடியும்.

நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை, அவர்களின் வீடுகளில் வைத்துப் படுகொலை செய்தோருக்கு மரணதண்டனையே உரிய,உகந்த தண்டனையாக அமையும். அத்தகைய தண்டனையை நீதிமன்றம் ஒன்றினாலேயே விதிக்கமுடியும்.

முந்திய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை விட, இப்போதைய அரசு மனித உரிமைகளைப் பேணுவதில் அதிக அக்கறை கொண்டுள்ளது என்று வெளி உலகத்திடம் பெயர் வாங்குவதற்காக, புள்ளி பெறுவதற்காக மட்டும் இராணுவமன்ற அறிக்கையை பயன்படுத்தக்கூடாது.

இந்த அறிக்கையை ஆதாரமாக வைத்து, சம்பந்தப்பட்ட சகல இராணுவத்தினர் மீதும் பொலீஸார் நீதிமன்றத்தில் கொலைக் குற்றம் சுமத்த வேண்டும். நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கவே செய்யும்.

போரில் தமக்கு ஏற்படும் இழப்புகளுக்குப் பழிவாங்கும் பொருட்டு அப்பாவித் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்ற சிப்பாய்களின் அவாவை மாற்ற வேண்டுமானால் —

அந்தக் குற்றத்துக்கு மரண தண்டனை கிடைக்கும் என்ற மனப்பயம் அவர்களுக்கு வர வேண்டும். வெறும் பதவிஉயர்வுத் தடை, அல்லது பதவி நீக்கம் போன்ற திணைக்களத் தண்டனைகளால் அதனை உண்டாக்க முடியாது. நீதிமன்றத்தின் மரணதண்டனையே சிப்பாய்களைத் திருத்துவதற்கு ஒரே மார்க்கம்.

அதிலிருந்து இராணுவத்தினரைக் காப்பாற்ற அரசு திருகுதாளம் செய்யுமானால், தமிழ்ப் பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து அது விலகிக் கொள்கிறது என்பதே அர்த்தம்.

# முகாம்களிலுள்ள 2 ஆயிரம் பேருக்கு லட்சக் கணக்கான பணம் செலவு!

கொழும்பு, பெப் 28

கடந்த நான்கு மாதங்களாக அரசாங்கம் வலிகாமத்தில் புனர்நிர்மாண, புனரமைப்பு வேலைகளுக்காக லட்சக்கணக்கான ரூபா பணத்தைச் செலவிட்டுள்ளது. ஆனால் வலிகாமத்தில் அகதி முகாம்களில் உள்ள 2 ஆயிரம் பேரே இவற்றை அனுபவிக்கிறார்கள். அதுவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் முதியவர்கள், இயலாதவர்கள். சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது தமது உடல் நிலையைக் கருத்தில்கொண்டு வலிகாமத்திலேயே தங்கி விடுவது என்று இவர்கள் முடிவு செய்திருந்தனர்.

சண்டே ரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வலிகாமத்தில் பஸ்சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

500 கே.வி ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை இயங்க வைப்பதற்காக விமானத்தில் 200கட்டில்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அத்துடன் கூட்டுறவுக் கடை, மக்கள் வங்கி என்பனவும் இயங்குகின்றன. ஓய்வுபெற்ற மேஜர் ஒருவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டு புனர்நிர்மாண வேலைகளுக்கு பொறுப்பாக அமர்த்தப்பட்டுள்ளார்.

இவ்வளவு பாரிய செலவில் 2 ஆயிரம் பேர் மட்டும் நன்மைபெறுவது துரதிர்ஷ்டமானது.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## பிரதேச செயலகப் பிரிவு எல்லைகள் மாற்றப்படும்

### சிபார்சு செய்ய குழு நியமனம்

கொழும்பு, பெப். 29

பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளை மாற்றி அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தற்போதுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும்.—

பிரதேச செயலகங்களின் எல்லைகளை விரிவு படுத்தி உப-அலுவலகங்கள் அமைப்பது குறித்தும்—ஆராய அரசாங்கம் ஒரு குழுவை நியமித்துள்ளது. இக்குழு மூன்று மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## பணமாக ஓய்வூதியம்

வடமராட்சி, பெப். 29

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையில் ஓய்வூதியம் பெறுவோர் இன்று காலை 8.30 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் தமது வவுச்சர்களுடன் வந்தால் அவர்களுக்கான ஓய்வூதியம் பணமாக வழங்கப்படும் என கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(உ-173)

# கிளிநொச்சிப் பாடசாலைகளில் தற்காலிகமாக மேலதிக வகுப்பறைகள்

கிளிநொச்சி, பெப். 29

கிளிநொச்சி மாவட்டததில் இயங்கிவரும் சில பாடசாலைகளில் மேலதிகமாக தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இடம்பெயர்ந்த மாணவர்களின் நன்மை கருதி இந்த வகுப்பறைகள் மேலதிகமாக அமைக்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லைநடராஜா இதனைத் தெரிவித்தார்.

நாளை முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளு'ம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இப்பாடசாலைகளில் இட நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே மேலதிக வகுப்பறைகள் அமைக்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக கல்விகற்பவர்கள் 47ஆயிரத்து 505 மாணவர்கள்.

இது தவிர வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்தில் தங்கி இருக்கும் மாணவர்கள் 42 ஆயிரத்து 358 பேர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-ரி)

## கிளிநொச்சிப் பாடசாலைகள் நாளை முதல் இயங்கும்

### முதலாம் தவணை விடுமுறை ஏப். 11

கிளிநொச்சியில் நாளை முதலாம் திகதி ஆரம்பமாகும் சகல பாடசாலைகளும் வகுப்பேற்றப் பரீட்சையின் பின்னர் ஏப்ரல் 11ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காக் மூடப்பட்டு மீண்டும் ஏப்ரல் 17ஆம் திகதி இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார்.

சென்ற இரு மாதங்கள் பாடசாலைகள் அனைத்தும் நடைபெறாததைத் தொடர்ந்து இந்நாட்களை ஈடுசெய்யுமுகமாக ஏப்ரல் மாத விடுமுறை குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

முதலாம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரையான வகுப்புக்களே நாளை ஆரம்பிக்கவிருக்கின்றன. (இ-ரி)

## திருமலையிலிருந்து தீவுப்பகுதிக்கு நரோமா கப்பல் மீண்டும் சேவையில் ஈடுபடும்

கொழும்பு, பெப். 29

திருமலைக்கும் தீவுப்பகுதிக்குமிடையே சேவையில் ஈடுபட்டு பின்னர் நிறுத்தப்பட்டிருந்த நரோமா கப்பல்,மீண்டும் சேவையை ஆரம்பிக்க உள்ளது.

நரோமாகப்பல் இந்தியாவில் திருத்த வேலைகளை முடித்துக் கொண்டு தற்போது திருமலை வந்துள்ளது.

இந்தத் திருத்த வேலைகளின் போது கப்பலில் பயணிகளுடன் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. நரோமா கப்பல் திருமலைக்கும் தீவுப்பகுதிக்குமிடையே தொடர்ந்து சேவையில் ஈடுபடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நரோமா கப்பல், முன்னர் பருத்தித்துறைக்கும் திருமலைக்குமிடையே சேவையில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கட்டாக்காலி நாய்கள் மின்சாரம் மூலம் அழிப்பு

கிளிநொச்சி, பெப். 29

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து, மின்சாரம் பாய்ச்சி அழிக்கும் நடவடிக்கை கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி நகரப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கரைச்சி பிரதேசசபை கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையை தற்போது மேற்கொண்டுள்ளது.

இப்படி பிடிக்கப்படும் நாய்களே மின்சாரம் மூலம் அழிக்கப்படுகின்றன. (இ-ரி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996 03-01 காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 வரை நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45— அறிவிப்புகள் தொடர்ந்து 8.00 மணி நீங்கள் கேட்டவை

1996-02-29 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-20 — நலந்தானா
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 அறிவிப்புகள் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி

1996-02-29

- ★ 5-00 — ஆரம்பம் சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — புதியவை
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — என் தெரிவு
- ★ 6-30 — ஒலிபரப்பு நிறைவு

## பயிற்சி வகுப்பு

கண்டாவளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பும், செயலமர்வும் எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் தர்மபுரம் மகா வித்தியாலயத்திலும்—

பூநகரி கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பும் செயலமர்வும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் முழங்காவில் மகா வித்தியாலயத்திலும்— நடைபெறும்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் தவறாது இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-ரி)

## நாடாளுமன்றை மீன்கடை என வர்ணித்த நீதிபதி!

### இந்திய எம். பிக்கள் போர்க்கோலம்

மணிலா, பெப். 29

நாடாளுமன்ற உறுப்பினர்களை ''குறுக்குப்புத்திக் காரர்கள்'' என்றும்—

நாடாளுமன்றத்தை ''மீன்கடை'' என்றும் கூறிய இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்.

நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்றம் கூடிய போது, பிரஸ்தாப நீதிபதியை நாடாளுமன்றம் முன் நிறுத்தி, வேலையில் இருந்து அவரை நீக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றி ஏகோபித்த குரலில், சபாநாயகரிடம் வேண்டிக்கொண்டனர்.

இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி சிவச்சரன் பிந்திராவே என்பவரே அந்த சர்ச்சைக்குரிய நீதிபதி ஆவார்.

தற்போது சிறையில் இருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் கல்பனாராய், நாடாளுமன்றக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்வதற்கு அனுமதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அவரின் மனுவை நிராகரித்து தீர்ப்புவழங்குகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களை குறுக்குப்புத்திக் காரர்கள் என்றும் நாடாளுமன்றத்தை மீன் கடை என்றும் நீதிபதி வர்ணித்தார்.

(இ- 7)

## நிதித்துறை ..

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ மங்களம் மரியாம்பிள்ளை — இல 5, சம்பத்தரிசியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ மரியம்மா சூசைப்பிள்ளை (தவமணி) — இல 36/02 சம்பத்தரிசியார் வீதி, பத்திமாவளவு, யாழ்ப்பாணம்.

★ தம்பாப்பிள்ளை பாலசிங்கம்—கலட்டி, ஏழாலை மேற்கு.

★ இரத்தினம்மா நடராசா — ஏழாலை வடக்கு.

★ செல்வநாயகி ராசதுரை — தம்பாளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகப் பரீட்சைக்கு வலிகாமம் மாணவரும்!

வவுனியா பல்கலைக்கழக கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பமான யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான, கலைத்துறைப் பரீட்சைகளுக்கு வலிகாமத்தில் இருந்து 5 மாணவர்கள் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் ஐவரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு விடுத்த கோரிக்கையை தொடர்ந்து —

வவுனியாவில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் தோற்ற வசதி செய்யப்பட்டிருந்தது.

இவர்கள் வலிகாமத்திலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா செல்வதற்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் முடிவடைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதிப்பரீட்சையில் 9 மாணவர்கள் மட்டும் வவுனியா நிலையத்தில் தோற்றினர் என்று அறிய வந்தது. (அ-3-ரி)

## வவுனியாவில் கூட்டம்

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவது தொடர்பான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் காலை 9 மணிக்கு வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு கோரும் செய்தி நேற்று யாழ். கல்வித் திணைக்களத்துக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் கிடைத்தது. கோட்டக் கல்வியதிகாரிகளை இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-ரி-3)

# அரசின் தீர்வு யோசனைகளுக்கு ஐ.தே.க வுக்குள் எதிர்ப்பு வலுக்கிறது

## இறுதி முடிவு எடுக்க செயற்குழு கூடுகிறது

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் அடங்கிய சட்ட ஆவணத்துக்கு கொண்டு வர வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆராய ஐ. தே. க. செயற்குழு எதிர்வரும் 7 ஆம் திகதி கூடி இறுதி முடிவை எடுக்கவிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அரசின் தீர்வு யோசனைகள் குறித்து கடும் விவாதம் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் யோசனைகளை கட்சி நிராகரிக்க வேண்டும் என்று எம். பிக்களான சுசில் முனசிங்க, சரத் கோங்காகே, சரத் அமுனுகம, ராஜிதசேனரத்தினா ஆகியோரும் செயற் குழு உறுப்பினர் ஸ்டான்லி கல்பகேயும் வலியுறுத்தி கூறினர்.

வடக்கு—கிழக்கு இணைப்புக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த இவர்கள் கிழக்கு மாகாணத்தின் எல்லையை மீள் வரையறை செய்து வடமாகாணத்துடன் இணைக்கும் அரசாங்கத்தின் யோசனையை ஐ.தே.க. ஏற்கக்கூடாது என்று அபிப்பிராயம் தெரிவித்தனர்.

ஒற்றையாட்சி என்ற கட்டுக் கோப்புக்குள்ளேயே தீர்வு அமைய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பிராந்தியங்களுக்கு வழங்கலாம் என்ற மங்கள முனசிங்க தெரிவுக் குழுவின் தீர்மானங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என பல எம். பிக்கள் வலியுறுத்தினார்கள். (இ-3)

# தீர்வுத்திட்டம் குறித்து 2 அமைச்சர்கள் மோதல்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டத்தில் இரு அமைச்சர்களுக்கு இடையில் கருத்து மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் தீர்வுத் திட்டம் குறித்து ஆராய இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுருந்தது.

போக்குவரத்து மகளிர் விவகார அமைச்சர் சிறிமணி அத்துலத் முதலியும், விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ. பி. திஸநாயக்காவுமே மோதலில் ஈடுபட்டனர். ஜனாதிபதி சந்திரிகாவும் இந்த கூட்டத்தில் இருந்தார்.

பிராந்திய சபைகளைக் கலைப்பது தொடர்பான அதிகாரங்கள் சம்பந்தமாகவே இருவருக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிரேஷ்ட அமைச்சர்களான டி. எம். ஜயரத்தின, தர்மசிறி சேனநாயக்கா, எஸ். பி. திஸநாயக்கா ஆகியோர் தீர்வுத்திட்டத்தை முன் எடுக்க ஜனாதிபதிக்கு முழு ஆதரவும் வழங்கினர் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# பெண்ணிடம் தமிழர்களின் புகைப் படங்கள்

கொழும்பு, பெப். 29

மாத்தறை பத்தேகமவைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய சிங்களப் பெண் ஒருவரிடம் இருந்து 28 தமிழ் இளைஞர்களின் புகைப்படங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவாம்.

கொழும்பு, புறக்கோட்டையில் அங்காடி வியாபாரம் செய்யும் இப்பெண் சந்தேகத்துக்குரிய வகையில் பந்தேகம பிரதேச செயலர் அலுவலகப் பகுதியில் நடமாடியதாகவும் —

அவரை கைது செய்து விசாரித்ததில் அவரிடம் இருந்து 28 தமிழ் இளைஞர்களின் புகைப்படங்கள் சிக்கின என்றும் — பொலீஸார் தெரிவித்தனர். பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-3)

# கப்பலில் ‘பிக்-அப்’

வடமரட்சி, பெப். 29

‘‘கெயர்’’ அமைப்பின் யாழ் மாவட்ட அலுவலகத்துக்குரிய ‘பிக்-அப்’ வாகனம் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் ‘ஹபரண’ கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது.

கெயர் நிறுவனத்தினால் இதுவரை பயன்படுத்தப்பட்டு பழுதடைந்திருந்த ‘‘வொக்ஸ்வேகன்’’ கார் இதே கப்பலில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது. (உ-173)

# பணமாக பெப்ரவரி சம்பளம்

வடமராட்சி, பெப். 29

இலங்கை வங்கி யாழ். மேற்றரக்கிளையில் சம்பளம் பெறும் அரச திணைக்கள ஊழியர்கள், மற்றும் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல்கள் பருத்தித்துறையில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

பெப்ரவரி மாதத்துக்குரிய சம்பளத்தைப் பணமாக வழங்குவது குறித்து இக் கலந்துரையாடல்களில் ஆராயப்படும். (அ-173)

# மரண அறிவித்தல்கள்

நயினாதீவு 7 ஆம் வட்டாரம்

## வேலுப்பிள்ளை நாகமுத்து

(ஓய்வுபெற்ற பரி. யோவான் கல்லூரி ஊழியர்)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், அரியாலை முள்ளி வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகமுத்து இராமநாதபுரத்தில் 27-02-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அமராவதியின் அன்புக் கணவரும், இராசரெத்தினம் (முன்னைநாள் இ.போ.ச. நடத்துனர்), காலஞ்சென்ற யோகரெத்தினம் (முன்னைநாள் இ.போ.ச. பரிசோதகர்), கனகரெத்தினம் (பரி. யோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியகுமாரி, இந்திராணி (ஜேர்மனி), செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சற்குணானந்தன்
(பெறாமகன்)

(40885)

திருமதி

## சிவலட்சுமி சிறியோகேஸ்வரன்

( Dip-in-Agr )

நாவாலி கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவலட்சுமி சிறியோகேஸ்வரன் 26 – 02 – 96 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் திரு. சிறியோகேஸ்வரன் (பிரதி அதிபர், நவாலி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், டேவிட் தர்சன், விடியா தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு/திருமதி ஆறுமுகத்தின் அன்பு மகளும், திரு/திருமதி தம்பிமுத்துவின் அன்பு மருமகளும், திரு சிவராசா, திருமதி தர்மகுலசிங்கம், திருமதி செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 28 – 02 – 96 இல் லண்டனில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சுதானந்தன்

தென் இந்திய திருச்சபை,
குருமனை,
வரணி.

(40880)

## இராமலிங்கம் முருகேசு (VRM)

(முன்னாள் நாவலப்பிட்டி கினிகத்தேனை வர்த்தகர்)

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் முருகேசு 28-2-96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், இராஜகோபாலின் (ஜமுனா ஸ்ரோர்ஸ், நெல்லியடி) அன்புத் தந்தையும், தவராணியின் மாமனாரும், ஜமுனா, ஜம்சனா, பிரசன்னா, சாதனா, அருண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-2-96) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்:
மு. இராஜகோபால்
(மகன்)

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(40316)

## ஒற்றையாட்சியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான அவகாசம் கேட்டு அவருக்கு கூட்டமைப்பு கடிதம் எழுதியுள்ளது.

இக் கூட்டமைப்பில் ஈ. பி. டி. பி., புளொட், ஈ.பி.ஆர். எல். எவ்., ரெலோ, ஈரோஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. (உ-3)

## ஆசிரியர்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் —

அதிபர்கள் தரப்பில் தொடர்ந்து வற்புறுத்தப்பட்டது.

அதிபர் சேவைக்குரிய சம்பளம் மீளாய்வு செய்யப்படும் என உறுதி கூறிவந்த அரசு, தற்போது ஆசிரிய சேவைக்கு வழங்கும் சம்பளத்தையே அதிபர் சேவைக்கும் வழங்கப் போவதாக அறிவித்திருக்கின்றது. (உ-3)

## சிங்களவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்குள் மூடப்படவுள்ளதாகவும்

இந்த லொட்ஜுகளில் தங்கியுள்ளோரை கொழும்புக்கு வெளியே அனுப்புவதற்குப் பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன என்பது தெரிந்ததே.

தலைநகர் கொழும்பிலிருந்து முழுத் தமிழரையும் வெளியேற்றுவதற்கு ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டிருப்பதையே இந்த வகைகளை எடுத்துக் காட்டுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-3)

# மரண அறிவித்தல்

## சி. அருணாசலம்

(கண் வைத்திய நிபுணர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கண் வைத்திய நிபுணர் சின்னத்துரை அருணாசலம் லண்டன் வேல்ஸில் காலமானார்.

அன்னார் அமிர்தவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிலஅளவையாளர் சின்னத்துரை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற கார்த்திகேசு நல்லதம்பி தம்பதியரின் மருமகனும், திருக்கேதீஸ்வரன் (லண்டன்), டாக்டர் திருநாவுக்கரசு (வேல்ஸ்), திருமதி சியாமளா (பப்புவா நியூகினி), செல்வி அனுஷியா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதி, டெய்ட்றா, தில்லையம்பலம் (பப்புவாநியூகினி) ஆகியோரின் மாமனாரும், சட்டத்தரணி ஆனந்தகுமாரசாமி, சட்டத்தரணி பாலசிங்கம், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சட்டத்தரணி அமிர்தலிங்கம், சரஸ்வதி தேவி, காலஞ்சென்ற தியாகலிங்கம், தர்மலிங்கம், லட்சுமிதேவி ஆகியோரின் சகோதரரும், திருமதி சற்குணவல்லி பத்மநாதன், திருமதி விஜயலட்சுமி இராமநாதன், டாக்டர் நல்லதம்பி நடேசன் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபா, ஹரேந்திரா, மதுமிதா, நிர்த்தனா ஆகியோரினது அன்புப் பாட்டனாரும் ஆவார்.

இறுதிச்சடங்குகள் இன்று வியாழக் கிழமை லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர். ந. நடேசன்
(பல் வைத்தியர்)
‘‘பெண் பொழில்’’
கந்த முருகேசனார் வீதி,
பல்லப்பை,
புலோலி தெற்கு.

Dr. A. Thiruketheeswaran,
114, Runnymede,
Mertonbbey,
Collinswood,
London SW192PH,
U. K.

(40849)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கிலுள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 29-02-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org